# உன் தேவனைச் சந்திக்க ஆயத்தப்படு



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

## செய்தி: **எலியா**, அக்டோபர் 18, 1953, லூயிவில், கென்டக்கி, அமெரிக்கா

43. நாம் என்னச் செய்யப் போகிறோம்? தேவன்... ஐ அடைத்திருப்பதில் வியப்பொன்று மில்லை. **நாம் ஆயத்தமாக வேண்டும் என்பதில் வியப்பொன்றுமில்லை.** ஆமோசில் என்று நம்புகிறேன், அது, "**ஓ இஸ்ரவேலே, உன் தேவனைச் சந்திக்க ஆயத்தப்படு. நீ செய்திக்கும் மற்றவைகளுக்கும் செவி கொடாமல் இருக்கிறாய். ஆயத்தப்படு**" என்று கூறுகிறது. **கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு உலகமானது ஆயத்தப்பட வேண்டிய ஒரு நேரம் எப்பொழுதாவது இருந்திருக்குமானால், அது இப்பொழுது தான். இதற்குச் செவிகொடுங்கள்.**

44. கலியாணத்திற்காக (weddings) ஆயத்தப்படுங்கள். நீங்கள், "நான் ஏன் கட்டாயம் ஆயத்தப்பட வேண்டும்? பிரசங்கியாரே, நான் ஏன்-ஏன் கண்டிப்பாக தேவனை சந்திக்க

ஆயத்தப்பட துவங்க வேண்டும்? நீர் எதைக் குறித்துப் பேசிக் கொண்டிருக்கிறீர்?" என்று கேட்கலாம். நீங்கள் ஒரு கலியாணத்திற்காக ஆயத்தப்பட்டு, நீங்கள் அதில் ஏமாற்றமடையவும் செய்யலாம். ஆம், ஐயா. ஏதோவொரு இடத்தில் நடக்கும் ஒரு மகத்தான கூட்டத்திற்காக, அல்லது வேறு ஏதோவொன்றிற்காக நான் ஆயத்தப் படுகிறேன் என்று உங்களால் கூற முடியும், நீங்கள் அதில் ஏமாற்றமடையவும் செய்யலாம். **ஆனால் நீங்கள் ஏமாற்றமே அடைந்து போய்விடாத ஒரு ஆயத்தம் அங்கு உள்ளது, அது நீங்கள் தேவனை சந்திக்க வேண்டும் என்பது தான், நீங்கள் ஒவ்வொருவருமே தேவனைச் சந்தித் தாக வேண்டும்.** எனவே, எது என்னைச் சிந்திக்க வைக்கிறது என்றால், நான் அறியும் ஒவ்வொரு தடவையும், **ஒரு நரைத்த தலைமயிரைக் காணும் ஒவ்வொரு தடவையும், அது என் னிடம், "நான் தேவனை சந்திக்க கண்டிப்பாக ஆயத்தப்பட்டாக வேண்டும்" என்று பேசு கிறது**. **அபாயச் சங்கு** (siren) **ஊதப்படுவதை நான் கேட்கும் ஒவ்வொரு தடவையும், நான் கண்டிப்பாக தேவனைச் சந்திக்க வேண்டும் என்று அறிகிறேன். இது ஒரு ஆயத்தப்படும் நேரமாகும். ஒரு மரணத்தைக்**

**குறித்தோ அல்லது எதைக் குறித்துமோ நான் கேள்விப்படும் ஒவ்வொரு தடவையும், அது ஒரு ஆயத்தப்படும் நேரமாக இருக்கிறது, தேவன் ஆயத்தமாக்கிக் கொண்டிருக்கிறார். நீங்கள் அந்தக் காரியங்களைக் காணும் போது, வியாதியை நீங்கள் காணும்போது, மருத்துவரின் அலுவலகத்தை நீங்கள் காணும்போது, நீங்கள் அந்தக் காரியங் களைக் காணும்போது, தேவனைச் சந் திக்க ஆயத்தப்படு என்ற ஒரு எச்சரிக் கையாக அது-அது இருக்கிறது, அது சமீபமாயுள்ளது.**

45. நீங்கள் இங்கே இந்த வாரத்தில், ஒரு மனிதனை, ஒரு வாலிபனைக் காண்கிறீர்கள், திரும்பிப் பாருங்கள், அதற்கு எந்த நேரமும் இல்லாதது போன்று தோன்றுகிறது, அங்கே அவன் ஒரு முடிவுக்கு வருகிறான், **அவனுடைய தலை மயிர்கள் நரைத்துக் கொண்டிருக்கின்றன, மேலும் அந்த அழகான வாலிப பெண், அவள் வயதாகி தளர்வுற்றுக் கொண்டிருக் கிறாள், தேவனை சந்திக்க ஆயத்தப்பட அது ஒரு எச்சரிக்கையாக இருக்கிறது.** ஆம், ஐயா, **அதை நோக்கி உங்களைச் சுட்டிக்காட்டும்**

எல்லாமே நியாயத்தீர்ப்பு நாளிலே உங்களுக்கு எதிரான சாட்சியாக இருக்கும். நான் பாதையின் முடிவுக்கு வரும்போது, நீங்கள் பாதையின் முடிவுக்கு வரும்போது, நாம் அங்கே அடையும்போது, இங்கேயிருக்கும் எல்லாமே, மரங்களும், ஒவ்வொரு எச்சரிக்கையும் நியாயத்தீர்ப்பில் நமக்கு எதிராக எழும்பும்படி தேவன் செய்யப் போகிறார். துன்மார்க்கரின் கூக்குரல்களும் கூட உங்களைக் குற்றவாளிகளென்று தீர்க்கும். நரகத்தில் இருக்கும் துன்மார்க்கரின் கூக்குரல்களும், நீங்கள் அங்கே நின்றுகொண்டிருக்கும்போது, "நல்லது நான்... நான் சரியானதையே செய்யக் கருதினேன், நான்-நான்-நான்..." என்று கூறலாம். அங்கே நரகத்தில் அவர்களில் இலட்சக்கணக்கானோர் (millions) இருப்பார்கள், அவர்கள், "நீர் அவனைக் குற்றவாளியாகத் தீர்த்திருக்க வேண்டும், ஏனென்றால் நானும் அதே நோக்கத்தைக் கொண்டிருந்தேன், நீரோ என்னை இங்கே கீழே அனுப்பி விட்டீரே. நீர் நீதிபரர் அல்ல, தேவனே, நீர் அதனோடு அவனை கண்டு

கொள்ளாமல் விட்டு விடுவீரா" என்று கூறுவார்கள்.

46. கன்னி மரியாளே மேலறைக்கு ஏறிப்போய், மதுவின் கீழாக குடித்து வெறித்த ஒரு பெண்ணைப் போல தள்ளாடும் அளவுக்கு, அவள் அப்படிப்பட்ட ஒரு வழியில் பரிசுத்த ஆவியினால் நிறைக்கப்படும் வரை யில், அங்கே தங்கியிருந்திருக்க வேண்டி யிருந்திருக்குமானால், அதைக் காட்டிலும் குறைவான எதையும் கொண்டு நீங்கள் எப்படி உள்ளே பிரவேசிக்கப் போகிறீர்கள்? ஆம், ஐயா, சகோதரனே, நாம் அதனோடு முட்டாளாக்கிக்கொள்ளுவதை நிறுத்தி, துரிதமாக வந்து தேவனோடு சரிப்படுத்திக் கொள்ளும் நேரம் இது. அப்போது தேவ னுடைய வல்லமை நம்முடைய ஜீவியங்களுக் குள் வரும். அது உண்மையாக இருக்கிறது. ஆமாம்.